# முன்சென்ற ஜீப் திரும்பி வந்தபோதே

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 25 இதழ் 180
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 09 — 08 — 1992


## கண்ணிவெடியில் சிக்கியது

(கொழும்பு)

மண்டைதீவு நோக்கி முன்னேறிய வாகனத் தொடர் அணி அராலிச்சந்தி பகுதிக்கு வந்தபோது அப்பகுதியில் பாதுகாப்பு நிலைமையில் பிரச்சினை எதுவும் இல்லையென்றும் வாகனங்கள் முன்நோக்கி நகரலாமெனவும் இப்பகுதிக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து கொப்பேகடுவவும் மற்றும் ஒன்பது உயரதிகாரிகள் அடங்கிய ஜீப் வண்டி முன்நோக்கிச் சென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாமீதான தாக்குதல் பின்னடைவு

(கொழும்பு)

தீவுப் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 10 உயரதிகாரிகள் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டதனுல் வடபகுதி மீதான [illegible] நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible]ரும் இராணுவ நடவடிக்கையொன்றை யாழ். குடாநாட்டில் நடத்தப் படையினர் திட்டமிட்டிருந்தனர். இதற்

(4ம் பக்கம் பார்க்க)

# ★ தீவுப்பகுதியில் புலிகளின் கண்ணிவெடி

# கொப்பேகடுவ, விமல உட்பட

# பத்து உயர் அதிகாரிகள் பலி!

## ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

**ஸ்ரீலங்கா இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள தீவுப்பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிசக்திவாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலில் வடபிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, யாழ். மாவட்ட இராணுவ தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ண, வடபிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் மோகன் ஜெயமஹா உட்பட பத்து உயர் அதிகாரிகள் பலியானுர்கள்.**

முகாமிலிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் கொப்பேகடுவவும், பிரிகேடியர் விஜய விமலரட்ணவும் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு நேற்றுமுன்தினம் சென்று அங்கு தங்கிவிட்டு நேற்றுக்காலை 9 மணியளவில் அங்கு முக்கிய மாநாடொன்றை நடத்திவிட்டு ஊர்காவற்றுறை சென்றனர். அங்கிருந்து ஜப்பானிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்ட ஜீப் ஒன்றில் மண்டைதீவை நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

இவர்களுடன் இணைந்து கடற்படைத் தளபதி மோகன் ஜெயமஹாவும் ஏனைய உயரதிகாரிகளும் இந்த ஜீப் வண்டியில் சென்றனர். இந்த ஜீப்புடன் இணைந்து இரு ட்ரக் வண்டிகள் வேறு டல அதிகாரிகளுடன் பின்தொடர்ந்தன.

## மண்டைதீவு நோக்கி பயணம்

யாழ்ப்பாணம் மீதான பாரிய தாக்குதல் குறித்து விரிவான திட்டம் தீட்டப்பட்டு அதனை நேரடியாக முக்கிய தளபதிகளுக்கு விளக்கும்முகமாகவே இவர்கள் மண்டைதீவை நோக்கி 9-30 மணியளவில் புறப்பட்டு சென்றனர்.

## ஜீப் வண்டி சிதறியது

வாகனத் தொடரணி சென்றுகொண்டிருக்கையில் சரவணைக்கும் மண்கும்பானுக்கும் இடையில் அராலிச்சந்தி என்னுமிடத்தில் சுமார் 10 மணியளவில் சக்திவாய்ந்த பாரிய கண்ணிவெடி வெடித்ததில் தளபதிகள் சென்ற ஜீப் வண்டி சுக்குநூறுகியது.

இத்தாக்குதலில் பிரிகேடியர் விமல விஜயரட்ண உட்பட ஒன்பது அதிகாரிகளும் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானுர்கள். பலத்த காயமடைந்த டென்ஸில் கொப்பேகடுவ ஆபத்தான நிலையில் அவ்விடத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு மருத்துவமனைக்கு மிக அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டு அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சில நிமிட நேரத்தில் மரணமானுர்.

## பலியான உயர் அதிகாரிகள்

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ண, கடற்படை உயர்தளபதி கொமடோர் மோகான் ஜெயமஹா, லெப். கேர்ணல் ஜி. எச். ஆரியரட்ண, லெப். கேர்ணல் எச். சலிபாஹேன, லெப். கேர்ணல் எச். ஆர். ஸ்ரீபன், மேஜர் என். எச். டி. அலிவிஸ், லெப். லங்காதிலக, லெப் டபிள்யூ டி. சி. விஜேபுர, டபிள்யூ ஜே. விக்கிரமரட்ண ஆகியோரே இச்சமபவத்தில் பலியானவர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொழும்பு நகரில் அதிர்ச்சி

மேஜர் டென்ஸில் கொப்பேகடுவ படுகாயமடைந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட செய்தி கொழும்பு நகர் முழுவதும் காட்டுத்தீபோல் பரவியதும் மக்கள் கூட்டமும் பத்திரிகையாளர்களும் ஆஸ்பத்திரி வாசலை சூழ்ந்து கொண்டபோதிலும் அவர்களை உள்ளே செல்லவிடாது இராணுவத்தினரும், பொலிஸாரும் தடுத்ததுடன், அப்பகுதியைச் சுற்றியுள்ள வீதிகளின் வாகனப்போக்குவரத்தும் உடன் தடுக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## கொப்பேகடுவவின் இறுதிப் பேட்டி

[கொழும்பு]

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கே தமது இறுதிப்பேட்டியை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேட்டியில்; புலிகளின் பலத்தை பெருமளவில்குறைத்துள்ளதாகவும் அவர்களை வெல்லக்கூடிய நம்பிக்கையிருப்பதாகவும் எனினும் புலிகளின் அதிரடித் தாக்குதலும் கைதேர்ந்த கண்ணிவெடித் தாக்குதலும் ஓர் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான கண்ணிவெடித் தாக்குதலிலேயே அவர் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது

(சி;)

## தலைநகரில் பதற்றம்

[கொழும்பு]

கொப்பேகடுவ மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இறந்த செய்தியை அடுத்து கொழும்பு நகரில் நேற்று பெரும் பதற்றம் ஏற்பட்டது

கொப்பேகடுவ உடலை பார்வையிட வந்த பெரும்பான்மையின மக்கள் பெரும் ஆத்திரத்துடன் காணப்பட்டனர்.

இதேவேளை கொழும்பு நகரிலுள்ள தமிழ்மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் அச்சமும் ஏற்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

(ரி)

## வடக்கு-கிழக்கு பகுதியில் படையினர் உஷார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கின் முக்கிய பகுதிகளிலுள்ள படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டு இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

உயர் தளபதிகள் கொல்லப்பட்டதையடுத்து புலிகள்திடீர் தாக்குதல்களை மேற்கொள்ள

[4-ம் பக்கம் பார்க்க]


ஆளுக்கொரு மரம் வளர்ப்பீர்
நாளுக்கொரு துயர் துடைப்பீர்

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான சகல இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### தாதி பயிலுனர்

தாதி பயிலுனர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு:- Dr. P. சொர்ணலிங்கம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (சி-6642)

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேஇல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 2 மாதத்தில் தொடர் 40 மணித்தியாலங்களில் அதி உயர் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, மலாகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-6648)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுச்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### வாங்கலாம் / விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசைமணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். சகல மணிக்கூடுகளது பற்றறிகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் சகலமணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். டிலிகா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6644

### ஜாதகம்

உங்கள் ஜாதகக் குறிப்புகளை நுட்பமான முறையில் விதிமுறைப்படி கணித்து விபரமான பலன்களை அறிந்துகொள்வதற்கு:- T.V. பாலா, சோதிட நிலையம், சைவ மகாஜன மகாவித்தியாலயம் முன்பாக, கே கே. எஸ். றோட், இணுவில். (ஏ-2349)

### விற்பனைக்கு

தாவடி - மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்கு உண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணிவீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு) (சி-6649)

சைவவித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலயத்தில் (நல்லை ஆதீனம் அருகில் சிறந்த பழமர, மரக்கறி நாற்றுக்களும் விற்பனைக்குண்டு. (சி-6652)

### றபர் சீல்கள்

அழகிய உறுதியான றபர் சீல்கள் குறித்த தவணையில் செய்துகொள்வதற்கு உகந்த இடம்:- T. V. பாலா, சோதிட நிலையம், சைவ மகாஜன மகாவித்தியாலயம் முன்பாக, கே. கே. எஸ். றோட், இணுவில். (ஏ-2348)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ்ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6551)

### தேவை

நல்ல நிலையிலுள்ள பெண்களுக்கான பைசிக்கிள் (Lady Bicycle) தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- சி. பவானி, 12, முத்தமிழ் வீதி, (Leyden Garments அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6651)

### ஜோதிடன்

''ANPUGEE'' என்ற பெயரில் இயங்கிய (கட்டுப்பாடு) சோதிட, (ஏனைய) நிலயம் JAFFNA FORT, J/81 இல், V. P கந்தசாமியின் இளையமகன் செல்வன் 'SHYANBUGEE, ஆல் இயங்குகின்றது (சி 6653)

## மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப டிப்ளோமா விண்ணப்பம்கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவா பல்கலைக்கழகத்தினரால் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (N D T.) பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

விண்ணப்ப முடிவுத் திகதி 14-08-92 ஆகும். இதற்கான தகைமைகள் க. பொ. த. (உயர் தரம்) கணிதப் பிரிவில் 3 பாடங்களில் சித்திபெற்ற 24 வயதிற்குக் குறைந்தவர்களும் விணணப்பிக்கலாம்.

தெரிவுப் பரீட்சைக்காக 50-00 ரூபாவுக்கான காசுக்கட்டளை எடுத்து அனுப்ப வேண்டும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும், விண்ணப்பப் படிவத்தையும் 'ஈழநாடு' காரியாலயத்தில் பார்வையிடலாம்.

தமிழ் மாணவர்கள் மிகக் குறைவாகவே விண்ணப்பிக்கின்றார்கள் என்றும், இதை நிவர்த்திசெய்து, தகுதியான சகல மாணவர்களும் விண்ணபிக்கவேண்டும் என்றும் தொழில் நுட்பம் சார்ந்த அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். (அ)

### உப்பு நிறுவன ஊழியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய உப்பளங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிகாரிகள், லிகிதர்கள் உட்படச் சகல நிரந்தர ஊழியர்களையும் நாளை 10ம் திகதி காலை 10-00 மணிக்கு மிருசுவில்றோமன்கத்தோலிக்க பாடசாலையில் ஒன்று கூடுமாறு பிராந்திய உற்பத்தி முகாமையாளர் தெரிவித்துள்ளார். இதன்போது 1991க்கான லீவு கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். (இ)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

பாட்டு:- எஸ். குமாரசாமி, வயலின்:- எஸ். வெங்கடேஸ்வரசர்மா, மிருதங்கம்:- எஸ். பாலச்சந்திரசர்மா.

## அகதிகள் மீது பொலிஸார் தாக்கு

[திருமலை]

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட தமிழ் அகதிகள் பலர் அங்கிருந்து இலங்கை திரும்புமாறு பலவந்தப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக தமிழகத்திலுள்ள பொலிஸ் நிலயமொன்றில் முறையிட்டபோது அங்குள்ள பொலிசாரினால் தாம் நையப்புடைக்கப்பட்டதாகவும் தமிழகத்திலிருந்து வந்த சில அகதிகள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## அறிவித்தல்

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை உரிமையாளர் சமாசம் எடுத்துள்ள தீர்மானத்தின் முடிவை இறைச்சிப் பாவனையாளராகிய தங்கள் கவனத்துக்கு அறியத் தருகின்றோம். இறைச்சிக்கு வெட்டப்படும் காலநடைகள் கொள்வனவு செய்துகொள்ள பெரும் தட்டுப்பாடாக இருப்பதனால் நாளாந்தம் இறைச்சிக்கடைகள் திறக்கமுடியாத நிலையில் இருக்கின்றோம். சமாசத்தின் சபை எடுத்துள்ள தீர்மானத்தின் முடிவு புதன்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் யாழ். மாவட்ட பிரதேசத்திலுள்ள இறைச்சிக்கடைகள் அனைத்தும் திறந்து வியாபாரம் செய்யப்படும் மற்றும் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை ஆகியநட்களில் இறைச்சிககடைகள் திறக்கப்படமாட்டாது என்பதைபாவனையாளராகிய தங்களுக்கு மிகவும் வருத்தத்துடன் எமது சமாசம் தெரிவித்துக்கொள்கின்றது.

செயலாளர்
க. சி. கிருஷ்ணன்

(ஏ-2350)

## ஆண்டு மூன்றானாலும் அலைமோதும் நினைவுகள்

09 - 08 - 1992



செல்வன்
கனகநாயகம்
கஜேந்திரா
(மாணவன்
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை)

பூவுலகு:
27-09-1975

பொன்னுலகு:
09-08-1989

★ அணையாத தீபம் ★

மூன்றாண்டு சென்றாலும்
முன்தோன்றும் எம்மணியே!—நீ
மாண்டு மடிந்தாலும்—எம்
மனதை விட்டுப்போகவில்லை.

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பவர்கள்
அன்பு பப்பா, அம்மா, ஆசை அண்ணா,
சின்னண்ணா, அம்மம்மா, அப்பாச்சிமார்,
ஆசை மாமி, ஆசை அத்தான்மார் (வெளிநாடு)
அண்ணமார், ஆசை மச்சாள்மார் (வெளிநாடு)
பெருமகன்மார், பெருமகள்மார் (வெளிநாடு)
இராசன் அண்ணா, பெரியப்பா (கொழும்பு,
பெரியம்மா, அக்காமார், அண்ணை (வட்டுக்கோட்டை)
பாட்டி, மாமான்மார் (வெளிநாடு)
''கனகவாசம்''
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (சி-6599)

## இடம்பெயர்ந்தோர் குடிசைகள் புனரமைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட குடிசைகள் பழுதடைந்துவிட்டதால் இவற்றைப் புனரமைப்பதற்குத் தேவையான கிடுகுகள், கயிறு, மரங்கள் என்பன வழங்கப்பட்டுவருகின்றன.

மட்டுவில் லெப். கேணல் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டம், மட்டுவில் வேதாந்த மட முகாம், கெருடாவில் முகாம், சரசாலை முகாம் என்பனவற்றுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

குடிசை ஒன்றிற்கு நூற்றி ஐம்பது மடை கிடுகும் ஒரு கிலோகயிறும், இரண்டுகிலோ பனை ஈக்கிலும், முப்பத்துஐந்து அடி நீள சிலாகையும் உதவி அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. (ரி-155)

## சிங்கப்பூரில் குண்டு வெடிப்பு மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

சிங்கப்பூரில் புதிதாக நிர்மாணிக்கபபட்டுவரும் வர்த்தக நிலையமொன்றில் ஏற்பட்ட பாரிய குண்டுவெடிப்பில் 3 பேர் பலியாகியுள்ளனர் 32 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குண்டு வெடிப்புக் குறித்த துரித விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் ஆயினும் இதுவரையில் பயனுள்ள தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென்றும் எனினும் விஷமிகளின் திட்டமிட்ட செயல் இதுவென்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## யாழ். விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜத்தினால் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக உரம் அண்மையில் இங்கு வந்து சேர்ந்த ''குமண கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ. மாவட்டத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்த உரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக மேற்படி சமாஜ தலைவர் திரு. ச. செல்வரத்தினம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். சர்க்கரையும் சமாஜத்தினால் இக்கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ]

## திரையரங்கு புனரமைக்க நிதி ஒதுக்கீடு

[கொழும்பு]

இராணுவ வன் செயல்களினால் சேதமடைந்த வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள திரையரங்குகளை புனரமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு ஐந்து லட்சம் ரூபா வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நிதி ஒதுக்கீடு ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் இந்நிதி சம்பந்தப்பட்ட திரையரங்குகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## மக்கள் நலன் காக்கும் கழகம்

[நெல்லியடி]

இமையாணன்மேற்குகிராம சேவையாளரின் பிரிவிலுள்ள மக்களின் நன்மை கருதி ''மக்கள் நலன் காக்கும் கழகம்'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

இமையாணன்மேற்குகிராம அலுவலரின் காரியாலயத்தில் கிராம சேவை அலுவலர் திரு கே. இரத்தினம் தலைமையில் இவ்அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. [ 60-அ]

யாழ்ப்பாணம்

★ இலங்கைத் தமிழ்

# அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை தடைப்படலாம்

(சென்னை)

ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து தீர்க்கமான முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை எனவே எதிர்வரும் 17ம் திகதி முதல் கட்டமாக தமிழ் அகதிகளை அனுப்பும் இறுதி முடிவு ரத்து செய்யப்படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயமும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஈழஅகதிகளை ஏற்றி இம்மாதம் 17ம் திகதி முதல் கப்பல் மூலம் தாயகம் திரும்ப வைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு இது தொடர்பாக சில நடைமுறைச்சிக்கல்கள் தோன்றியிருப்பதாக அறியவருகிறது.

இந்தியாவிலிருந்து அகதிகளை திருப்பி அனுப்புவதை உலக நாடுகளில் உள்ள ஏனைய அகதிகளையும் அனுப்ப அந்த நாடுகள் கோரலாம். மற்றும் அகதிகளுக்கான தேவைகள் பூர்த்தி செய்வதும் சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே ஐ. நா. ஸ்தானிகராலயம் இவ்விடயத்தில் சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும் நோக்கில் முதல்கட்டமாக கப்பல மூலம் அனுப்பும் முயற்சியை இடை நிறுத்தவுள்ளது. (156-சி)

## பரிசாரகர் பரீட்சை:
# சித்திபெற்றோரை
## கொழும்பு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற 'பரிசாரகர்' பரீட்சையில் சித்தி பெற்ற 36 பேரையும் நேர்முகப் பரீட்சைக்கு எதிர்வரும் 18-ம் திகதி கொழும்புக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் மேற்படி பரீட்சையில் சித்தி பெற்ற 36 பேரும் கொழும்புக்கு வருவது மிகவும் கஷ்டம் என்றும் இந்த நேர்முகப் பரீட்சையை யாழ். நகரிலேயே நடாத்துமாறும் இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த 36 ஊழியர்களின் வேண்டுகோளை உடனடியாக தாம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி-இ)

## இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை குமரன் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர்போட்டி இன்று 9-ம் திகதி ஞாயிறு பி ப. 1-30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார்ஆலய முன்றலில் நடைபெறும். (71)

★

[பண்டத்தரிப்பு]

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் சங்க யாழ். பிராந்தியக்கிளையின் செயற்குழுக்கூட்டம் பொண்ட் கல்வி நிலையத்தில் இன்று 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.(72)

★

(யாழ்ப்பாணம்)

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனது நினைவுநாள் இன்று காலை 10-00 மணிக்கு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமை தாங்குவார். சிறப்புரைகளை விடுதலைப் புலிகள் பிரமுகர் மு. வே. யோ வாஞ்சிநாதன், பொன். பூலோகசிங்கம். திருமதி தி. கோபாலரத்தினம், ஆ. தர்மரத்தினம் ஆகியோர் நிகழ்த்துவா. ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்னும் தலைப்பிலான கவியரங்கு க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறும்.

(எஸ்-சி)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் மாதாந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்றுமாலை கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் இல்லத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ''சமுதாய நோக்கில் புதுக் கவிதையா அல்லது மரபுக் கவிதையா தாக்கத்தை ஏற்படுத்துகின்றன'' என்ற பொருள் பற்றி கலந்துரையாடல் இடம் பெறும். நிகழ்வுக்கு கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை தாங்குவார்.

[எஸ்-சி]

மாணவர் உலகின்

# நம்பிக்கை நட்சத்திரமாக ஆசிரியர்கள் திகழவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''ஆசிரியத் தொழிலானது இறைவன் அளித்த அழைப்பாக ஏற்று மாணவ உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களாக ஆசிரியர்கள் திகழவேண்டும்''

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் யாழ். இந்துக்கல்லூரியில் நடந்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் கருத்தரங்கின் நிறைவுநாள் விழாவில் இவ்வாறு கூறினார் பட்டதாரி பயிலுநர் ஆசிரியசங்கத் தலைவர் திரு. வி. ஏ. சிவராசா தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் நோக்குடன் கல்வி விஞ்ஞானம், வரலாறு. ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடாத்த கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்தின்படி மேற்படி பயிற்சிக் கருத்தரங்கினை நடாத்திய விரிவுரையாளர்களுக்கும் மற்றும் கல்விப்பணிப்பாளர் யாழ். தீவக, வடமராட்சி, தென்மராட்சி, மருதனமடம், பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சங்கம் இவ்விழாவில் பாராட்டுரை வழங்கி மதியபோசனவிருந்தும் அளித்துக் கௌரவித்தது. (அ)

# இராசி பலன்

**09.08-1992**
**ஞாயிற்றுக்கிழமை**
**(தமிழுக்கு ஆடி 25)**

ஏகாதசி மு. ப. 9-53 வரை மூலம் பி. இ. 2-23 வரை ராகு காலம் மாலை 4-34 முதல் 6-03 வரை, சுபநேரம் காலை 9-03 முதல் 10-34 வரை. அமிர்தசித்தயோகம் ஏகாதசி விரதம்.

மேடம்- அசாத்தியதுணிவு, நண்பர் பிரிவு, கௌரவக் குறைவு.

இடபம்- குடும்பபிரிவு, தொழில்மந்தம், மனச்சுமை.

மிதுனம்- வியாபார மேன்மை, பணவரவு, அதிஷ்டம்.

கடகம்- பயணசெலவு, மன அமைதி, தனலாபம்.

சிங்கம்- கடன் தொல்லை, கெட்டகனவு. வீண்பகை.

கன்னி- தீராதமனக்கவலை, பெண்வகைக கலகம், பயம்.

துலாம்- கலைத்துறை ஈடுபாடு, குடும்ப மகிழ்ச்சி, நண்பர் உதவி.

விருச்சிகம்- நோய் நொடி, சத்துருபயம், இடையூறு.

தனுசு- புத்திரி நன்மை, காரியசித்தி, விவேகம்.

மகரம்- பாராட்டு, ஊதிய உயர்வு, வாகன சுகம்.

கும்பம்- கல்வி ஞானம், தியாகசிந்தை, வெற்றி வாய்ப்பு.

மீனம்- சுயகௌரவம், பதவி உயர்வு, மனமகிழ்ச்சி.

— ஜோஸ்யர்

# இசை நடன பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உயர்தர) 1991 (விசேட) பரீட்சை இசை, நடன செய்முறைப் பரீட்சைகள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இம்மாதம் 15 ம் திகதி ஆரம்பமாகும்.

பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேசப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைப் பரீட்சார்த்திகளுடன் தொடர்புகொண்டு அனுமதி அட்டையில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் தவறாது பரீட்சைக்கு சமூகமளிக்கச் செய்ய வேண்டுமெனவும், தற்பொழுது நடைபெறும் க. பொ. த. (உயர்தர) 1992 பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகள் நேரமாற்றம் செய்ய வேண்டியேற்படின் பரீட்சகர் குழுவிடம் நேரிற்சென்று மாற்றுத் திகதியை இம்மாதம் 25ம் திகதிக்கு முன் தவறாது செய்துகொள்ளவேண்டுமென்பதையும் யாழ். கல்விப்பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். (சு அ)

## தேறுதலை எங்கட்குத்தா!

ஆறு முகனே! அரக்கர் குலமழித்து
வீறுகொண்ட நல்லூரின் வித்தகனே – ஏறுமயில்
ஏறிப் பறந்துவந்து எத்தர் படையழித்துத்
தேறுதலை எங்கட்குத் தா!

- அமுதன்

(இன்று நல்லூர் கந்தசாமி கோவில் 7ம் திருவிழா)

# செய்திச்சுருக்கம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவில் வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் கீழ் வாரஇறுதி ஆங்கில வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சுழிபுரம விக்ரோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் இந்த வார இறுதி ஆங்கில வகுப்புகள் வளர்ந்தோருக்காக நடாத்தப்படவுள்ளது. [72-இ]

### தற்காலிக கொட்டகை

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 54 ஆயிரம் ரூபா பெறுமதியான நூறுஅடி நீளமான தற்காலிக கொட்டகை ஒன்று வெகு விரைவில் அமைக்கப்படவுள்ளது

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்கள் இடம் பெயர்ந்து வந்து இக்கல்லூரியில் கல்வி கற்பதை அடுத்து ஏற்பட்ட இடப்பற்றாக் குறையை நிவர்த்து செய்யும் முகமாகவே இக்கொட்டகை அமைக்கப்படுகிறது.

அரசாங்க அதிபரின் விசேட பணிப்பின் பேரிலேயே இக்கொட்டகை அமைக்கப்படவிருக்கின்றது. (139-இ)

### இடமாற்றம்

(நெல்லியடி)

சுன்னாகம் பிரதேச சபையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு இ. இராமலிங்கம் இம்மாதம் முதலாம் திகதி முதல் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(160-இ)

### ஆங்கில ஆசிரியர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்ற விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் நடைபெற்றபோது 125 பேர் தோற்றினர்கள்.(72-அ)

### இறைச்சி விலை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். சின்னக்கடை நாவாந்துறை, ஆனைக்கோட்டை ஆகியஇடங்களிலுள்ள இறைச்சிக்கடைகளில் ஒருகிலோ மாட்டிறைச்சி 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பு ஒருகிலோ மாட்டிறைச்சி 60 ரூபாவாக விற்கப்பட்டது. தற்பொழுது 70 ரூபாவாக விற்கப்படுகிறது. (59-அ)

### பிரதேசசபை உப அலுவலகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகப்பகுதியின் சனசமூகநிலையங்களின் சமாசத்திற்கு அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (52-அ)

### நல்லின கோழி முட்டைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லின கோழி வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாக அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் தற்போது யாழ்.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தினுல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கிராமிய மட்டத்தில் கோழி வளர்ப்பினை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையில் மாதம் ஒன்றுக்கு 2 000 வரையிலான ரீ-8, டபிளயூ-8 நல்லின கோழிமுட்டைகள் அடைவைப்பதற்கென விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சுன்னாகம் காமதேனு பண்ணையிலும் அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. [அ]

### தவறவிடப்பட்ட பொருட்கள்

[திருநெல்வேலி]

நல்லூர் கந்தசாமிகோவில் உற்சவ காலங்களில் தமிழீழ காவல்துறையினர் தவறவிடப்பட்ட பொருட்கள் பற்றி உடனுக்குடன் அறிவித்து வருகின்றனர்.

ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு விடுக்கும் அறிவித்தலில் தவறவிடப்பட்டோர் விபரம் தவறவிடப்பட்ட பொருட்கள் கிடைத்துள்ள பொருட்கள் பற்றி உடனுக்குடன் அறிவிக்கப்படுகிறது. [158-அ]

### அறிவூட்டல் வகுப்பு

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் காட்டுப்புலம் அ. த. க. பாடசாலையில் அறிவூட்டல் வகுப்புக்களை நடத்துவதற்குப் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (72-அ)

## பார்சிலோனா ஒலிம்பிக்கில் முன்னணி வகிக்கும் நாடுகள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இணைந்த சோவியத் | 42 | 34 | 25 |
| ஐக்கிய அமெரிக்கா | 33 | 33 | 32 |
| ஜெர்மனி | 27 | 21 | 27 |
| சீனு | 16 | 20 | 15 |
| ஹங்கேரி | 10 | 7 | 2 |
| ஸ்பெயின் | 10 | 1 | 10 |
| தென்கொரியா | 9 | 3 | 13 |
| பிரான்ஸ் | 7 | 5 | 13 |
| அவுஸ்திரேலியா | 6 | 8 | 9 |
| கனடா | 6 | 1 | 6 |
| ருமேனியா | 4 | 4 | 6 |
| இத்தாலி | 4 | 5 | 8 |
| பிரிட்டன் | 4 | 3 | 5 |
| கியூபா | 4 | 2 | 7 |
| யப்பான் | 3 | 7 | 7 |
| போலந்து | 3 | 4 | 6 |
| செக்கோசிலவாக்கியா | 2 | 2 | 1 |
| துருக்கி | 2 | 1 | 1 |
| நோர்வே | 2 | 2 | — |

# வவுனியா எல்லையில் படையினர் தயார் நிலையில்

(கொழும்பு)

வவுனியாவுக்கு வடக்கே எல்லைப்புறங்களில் கடமைபுரியும் ஸ்ரீலங்காப் படையினர் எந்த தாக்குதலையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ உயர் பீடம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ காவலரன்கள் மீது விடுதலைப் புலிகள் எவ்வேளையிலும் பலத்த தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே மேற்படி முன்னேற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க-ரி]

# ஜனதா தள் கட்சி இரண்டாக பிளவுற்றது

(புதுடில்லி)

இந்தியாவில் முக்கிய எதிர்க் கட்சிகளில் ஒன்றான ஜனதா தள் கட்சி நேற்று இரண்டாகப் பிளவுபட்டது.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் ஜனதா தள் கட்சியிலிருந்து விலகியிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த கோஷ்டிக்கு முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் மகனும், முன்னாள் அமைச்சருமான அஜித்சிங் தலைமை ஏற்றுள்ளார்.

இந்த 20 எம். பிக்களும் காங்கிரஸ் கட்சியில் இணைந்து விட்டால், சிறுபான்மையாக விளங்கும் காங்கிரஸ் அரசு பெரும்பான்மையாக மாறி விடும் என்பது குறிப்பிடத்தக்கது. (கே)

# யாழ். பல்கலைக்கழக அணி கொழும்பில் சாம்பியன்

[கொழும்பு]

இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களுக்குமிடையில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

நாரஹன்பிட்டிய சாலியா என்ற இடத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி கொழும்பு பல்கலைக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது.

யாழ். பல்கலைக்கழக அணி முதல் போட்டிகளில் றுகுணுவை 3:1 என்றும், மொறட்டுவவை 2:1 என்றும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதியாகியிருந்தது. யாழ் பல்கலைக்கழக அணிக்கு முன்னாள் பிரபல வீரர் திரு. ரி. பத்மநாதன் பயிற்சியாசிரியராகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தானுவை பாராட்டி கவிதை

(சென்னை)

பாண்டிச்சேரி கம்பன் கலையரங்கில் நடந்த பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் 'தமிழ் நிலம்' என்ற நூல் விற்பனை செய்யப்பட்டது

ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமான 'தானு'வைப் பாராட்டி அந்நூலில் கவிதை எழுதியுள்ளதாக 'உலகத் தமிழ் இன முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் புலவர் பெருந்சித்திரனார் மீதும் மற்றும் மூவர் மீதும் புதுவைப்பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நூலுக்கும் புதுவை அரசு தடை விதித்துள்ளது. (சி)

யாழ். குடாமீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் இருந்தபோது இப்பாரிய தாக்குதல நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் படையினர் தரப்பில் தாக்குதலின் போது வழிநடத்தும் அதிகாரிகள் தற்போது இல்லாத காரணத்தினால் குறிப்பிட்டபடி வடபகுதி தாக்குதலைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

முன்சென்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நேரத்தில் திரும்பி வந்தபோதே இந்த ஜீப்வண்டி கண்ணிவெடியில சிக்கிச் சிதறியது.

இதேவேளை இந்த ஜீப்புடன் வந்த மற்றைய இரு வண்டிகளும் ஹெலிகொப்டர் ஒன்றும் கண்ணிவெடி வெடித்த இடத்திலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் நின்றன.

இந்த வாகனங்களிலிருந்தவர்களும் ஹெலிகொப்டரிலிருந்தவர்களும் ஜீப் வண்டி சிதறியதை நேரில் பார்த்தனர். இதன்போது இரு வாகனங்களும் ஹெலிகொப்டர்களும் சேதமடைந்ததுடன் அவற்றில் இருந்த படையினரும் காயமடைந்தனர்.

இத்தகவலை கூட்டுப்படைத் தலைமையகம் வெளியிட்டது. (மா-கி-ரி-கே)

## ஒலிம்பிக் இறுதி நாள்

(பார்ஸிலோனா)

பார்ஸிலோனா ஒலிம்பிக் போட்டி இன்றுடன் முடிவடைகின்றது. இந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றதும், பழமைவாய்ந்ததுமான விளையாட்டரங்கிலேயே இறுதி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நேற்றுவரையுள்ள நிலைபரத்தின்படி முன்னாள் சோவியத் குடியரசுகள், அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் முதல், இரண்டு, மூன்று என்ற வரிசைக் கிரமப்படி பதக்கங்களைப் பெற்ற நாடுகளாக முன்னணி வகிக்கின்றன. (வி)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8

தீவுப்பகுதியில் (1ம் பக்கத் தொடர்ச்சி)

# ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்

இதேவேளை ஆஸ்பத்திரியை சுற்றிவளைத்து இராணுவ வாகனங்கள் நிறுத்தப்பட்டதுடன் கொழும்பிலுள்ள முப்படை உயர்தளபதிகளும் அரசு உயரதிகாரிகளும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். டென்ஸில் கொப்பேகடுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒருசில நிமிடத்தில் மரணமாகி விட்டாலும் அவரது மரணச்செய்தி பல உயர் அதிகாரிகளுக்கு அரைமணி நேரத்தின் பின்பே அறிவிக்கப்பட்டது.

மேஜர் டென்ஸில் கொப்பககடுவவின் உடல் கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து பிற்பகல் சகல இராணுவ மரியாதைகளுடன் வெளியே கொண்டுவரப்பட்டபோது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வீதிகளின இருமருங்கிலும் நின்றனர். இவரது உடல், கொழும்பு கறுவாக்காட்டிலுள்ள ரேஸ்மிஸ் பிளேஸிலுள்ள அவரின் வாசஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

# ஜனாதிபதி, பிரதமர் அஞ்சலி

இதேவேளை பிரிகேடியர் விஜய விமலரத்னவின் சடலமும் ஏனைய சில உயர் அதிகாரிகளின் சடலங்களும் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டது. கொப்பேகடுவவின் சடலத்திற்கு அவரது மனைவியும், 3 பிள்ளைகளும் இறுதி அஞ்சலி செலுத்தினர் இதையடுத்து பிரதி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க உட்பட பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் அஞ்சலி செலுத்தினர்.

பாலை ஜனாதிபதி பிரேமதாஸாவும் பிரதமர் விஜேதுங்காவும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர் இதையடுத்து அங்கு கூடியிருந்த சுமார் 15,000 மக்கள் முன்னிலையில் ஜனாதிபதி அஞ்சலி உரையாற்றினார்.

# பாதுகாப்பு அமைச்சு கவலை

பாதுகாப்பு அமைச்சு இச்சம்பவம் பற்றி ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததுடன் நாட்டிற்கு தேசிய மட்டத்தில் ஏற்பட்ட இத்துயர சம்பவத்தில் ஆயுதப்படையினர் தமது நோக்கங்களை அடைவதற்கான முயற்சியினை இரட்டிப்பாக்கி வருகின்றனர் என்றும், பொதுமக்கள் அமைதியாக இருக்கவேண்டுமென்றும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

# வடபகுதி ஆணைத் தளபதி

வடபகுதி ஆணைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ (52 வயது) 1960 ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தவர், இவ்வருட இறுதியில் லெப். ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்படவிருந்தார். 1990ம் ஆண்டு மேஜர் ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட்ட இவர் வடமராட்சியில் 1987 மே27ல் நடந்தப்பட்ட 'ஒபரேஷன்' லிபரேஷன் தாககுதலின்போது தலைமை தாங்கிய இவர் பிரிட்டனைச் சேர்ந்த றோயல் நேஷனல் டிபென்ஸ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார் இவருடைய சேவையைக் கௌரவித்து ரண விக்கிரம விருது வழங்கப்பட்டது.

# பிரிகேடியர் விஜய விமலரட்ண

பலாலி இராணுவ தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ண (51 வயது) 1961ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தவர். ஒபரேஷன் பலவேகய 1, ஒபரேஷன் பலவேகய 2 ஆகிய தாக்குதல்களின்போது முக்கிய பங்கு வகித்தவர். வடபகுதி தாக்குதல்கள் பலவற்றிலும் பங்கெடுத்தவர். இவரது சேவையைக் கௌரவித்து ரண விக்கிரம விருது வழங்கப்பட்டது.

# வடபிரதேச கடற்படை தளபதி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடற்படை இராணுவ நடவடிக்கைகளைதிட்டமிடும் உயர்அதிகாரியான கொமடோர் மோகன் ஜயமஹா (43வயது) 1969ம் ஆண்டு கடற்படையில் சேர்ந்தவர். 1990-ம் ஆண்டு கொமடோ தரத்திற்கு உயர்த்தப்பட்டார். அவுஸ்திரேலியா இந்தியா, பிரிட்டன் ஆகிய இடங்களில் கடற்படைப்பயிற்சி பெற்ற இவர் வடபகுதியில் இடம்பெற்ற கடற்படைத் நடவடிக்கைகளில் முக்கிய பங்கெடுத்தவர். தற்பொழுது வடபிரதேச கடற்படைத் தளபதியாக கடமையாற்றி வந்தவர்.

# அரசும் அமைச்சும்பேரதிர்ச்சி

ஒரே நேரத்தில் பல பாதுகாப்பு உயரதிகாரிகள் கொலைப்பட்டதினால் அரசும், பாதுகாப்பு அமைச்சும் பேரதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளன.

படை அதிகாரிகளை கூட்டாகவும் வாகனங்களில் கூடுதலாகவும் செல்லவேண்டாமென இராணுவ தலைமைப்பீடம் முன்னெச்சரிக்கை செய்திருந்தும் இராணுவ அதிகாரி ஒரேநேரத்தில் கூட்டாகச் சென்று பலியானது குறிப்பிடத்தக்கது.

# படை உயர்பீடம் ஆராய்வு

தீவுப்பகுதி ராணுவ கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசும் இராணுவமும் கூறும் அதேவேளை விடுதலைப் புலிகள் இப்பகுதிக்கு வந்து எவ்வாறு இந்த கண்ணிவெடி தாக்குதலை நடத்தினர் என்பது பற்றி இராணுவ உயர்பீடம் ஆராய்ந்து வருவதோடு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

# ராணுவ மனத்திடம் பாதிப்பு!

இராணுவ உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டதனால் புலிகளுக்கெதிராக போரிடும் இராணுவத்தினரிடையே மனத்திடம் பாதித்திருப்பதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது இராணுவத்தில் பல பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினர்.

# உலக செய்திகளில் முக்கியத்துவம்

தீவுப்பகுதியில் இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட செய்தி சர்வதேச செய்தி நிறுவன தொடர்புசாதனங்களில் நேற்றிரவு முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பப்பட்டன செய்தி ஆரம்பிக்கும்பொழுதே இச்செய்தி முதலாவதாக அறிவிக்கப்பட்ட பின்னரே ஏனைய செய்திகள் ஒலிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரி-சி-மா-கே-வி-அ

வடக்கு-கிழக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லாமென்ற அச்சத்திலே படையினர் உஷார்படுத் தப்பட்டுள்ளனராம்.

இதேவேளை கொழும்பிலும் ஏனைய முக்கியநகர் பகுதிகளிலும் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி-மா)

## போராட்டம்

(சென்னை)

தமிழகத்தில் வாரம் ஒரு முறை போராட்டம் நடாத்த வேண்டிய சூழ்நிலையை தமிழக முதல்வா செல்வி ஜெயலலிதா உருவாக்கிவருகிறார் என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## ம. எண்ணை விநியோகம்

(நல்லூர்)

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அநுமதி அட்டைக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், நேற்று முன்தினம் அரசடி வீதியில் வைத்து ஒருவருக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டது.